Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா; 5:50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 மார்ச் (29 - 03 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 39

## கொழும்புச் செய்திகள் தவறானவை ச.தே.செ.ச.

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு வழங்கி வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெறும். விடுதலைப்புலிகளுக்கு அவ்வமைப்பைச் சேர்ந்த ஆயுதந்தாங்கிய போராளிகள் பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள் எனக் கொழும்பு நாளிதழொன்றில் கடந்த 27ஆந் திகதி வெளியான செய்தி தவறானதென மேற்படி சங்கம் (8ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை மாவட்டத்தில் 4 மாணவர் உட்பட

# 34 தமிழர் வெட்டிக் கொலை

# 6 மாணவிகள் கடத்தல்

## முஸ்லிம் ஊர்காவற் படையின் வெறித்தனம்

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்த இருவேறு சம்பவங்களில் முப்பது தமிழ் விவசாயிகளும், நான்கு மாணவர்களும் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட அதேவேளை ஆறுமாணவிகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இக் கோரச் சம்பவங்கள் பற்றி தெரிய வருவதாவது கடந்த இருபத்தைந்தாம் திகதி காரைதீவு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அறுவடை செய்வதற்காக அட்டப்பள்ளத்தில் உள்ள வயல்களுக்கு சென்று கொண்டிருந்த சமயம் இடைமறித்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் விவசாயிகளில் முப்பது பேரை கூரிய கத்திகளால் துடிக்கத் துடிக்க வெட்டிக் கொன்றுள்ளனர்.

அதே தினத்தில் தம்புலு பகுதியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி சென்று கொண்டிருந்த மாணவ மாணவிகளை இடைமறித்து அவர்களில் ஆறு மாணவிகளை இழுத்துச் சென்றுள்ளனர். மாணவர்கள் நால்வரை அதே இடத்தில் வெட்டிக்கொன்றுள்ளனர்.

### ஹெலி தாக்கு

கைதடி மேற்குப் பகுதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த லொறி ஒன்றின்மீது, உலங்கு வானூர்தி ஒன்றுநேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் சூட்டுத் தாக்குதல் மேற்கொண்டது.

லொறி சாரதியும், இளைஞரும் பாதுகாப்புத் தேடிக் கொண்டதால் தப்பித்துக் கொண்டனர். லொறிக்கு சிறித சேதமேற்பட்டது. இப்பகுதியிலுள்ள ஒரு வீடும் சேதமடைந்தது. (செ.தமை)

## கீரிமலையில் பலத்த மோதல்; ஒருவர்பலி;பலர்காயம்;வீடுகள்சேதம்

(கீரிமலை)

கீரிமலை இருஷ்ணர் கோவில் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்குப் புறமாக மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி விமானப்படை, கடற்படையினரின் உதவியுடன் வெளியேறியபோது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றது. இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் பலியாகினார். ஐவர் காயமடைந்தனர். பல பொதுமக்களின் சொத்துக்கள் நாசமாயதுடன் பாடசாலை கட்டடங்களும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 10 மணியளவில் கீரிமலைப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது இரண்டு பொம்பர்களும் ஹெலியும் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டன. இதே வேளை சேந்தான்குளம், கீரிமலை, கடற்பகுதியிலிருந்து நான்கு கடற்படை பீரங்கிப் படகுகள் மக்கள் குடியிருப்பு (8ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை காவலில் இருந்து 70வயது மூதாட்டி விடுதலை

(வேலணை)

சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பல மாதங்களாகியபின், 70 வயது மதிக்கத்தக்க வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவரை நயினாதீவில் உள்ள கடற்படையினர் அங்குள்ள கிராமசேவை அலுவலரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சுயமாக சிந்திக்க முடியாத நிலையில் உள்ள இந்த மூதாட்டி உடனடியாக நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மூதாட்டியை கடற்படையினர் கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கும்போது இவருக்குச் சொந்தமான சில (8ஆம் பக்கம் பார்க்க)

## வெல்லாவெளியில் மோதல்; இருவர் பலி; ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

வெல்லாவெளி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரும் ரெலோவினரும் விடுதலைப்புலிகளின் கடுமையான தாக்குதலுடன் பின்வாங்கினர். பின்வாங்கும் பொழுது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன், மகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் மகளும் மகனும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர் தந்தை படுகாயமுற்றார்.

நேற்று முன்தினம் பிற்பகல் (8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரஞ்சன் கொலைக்கு காந்தரூபன் குழுவே காரணம்

### —ஜெனரல் சிறில் ரணதுங்க

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜெரெட்னா கொலையுண்ட வெடிகுண்டு சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளின் காந்தரூபன் குழுவினரே காரணம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியுள்ளார். இச்சம்பவத்திற்குப் பொறுப்பானவரின் பெயர் இளைய தம்பி இருபாலன் என்றும், அவர் ஐரோப்பாவில் இருந்து இந்தியா வழியாக, இரண்டு வாரங்களுக்கு முன்பு இலங்கை வந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார். இவரைப் பிடிக்க இலங்கையில் பொலிஸ்வலை விரிக்கப்பட்டிருப்பதுடன் இந்தியப் பொலிசாரின் உதவி நாடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## புலிகளின் பங்கு இல்லாமல் இனப் பிரச்சினைக்கு தீர்வு

### —நெவில் கனகரத்தினா

(சென்னை)

''விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பங்கும், பணியும் இல்லாமலேயே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியும்'' என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக பொறுப்பேற்றுச் செல்லும் நெவில் கனகரத்தினா புதுடில்லி செல்லும் வழியில் சென்னையில் செய்தி (8ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் ஆயருக்கு நிகழ்ந்தது போன்று

## மல்வத்தை பீடாதிபதி விடயத்தில் கற்பனைபண்ணக் கூட முடியாதது

(யாழ்ப்பாணம்)

மன்னார் ஆயர் தாக்குதல் போன்ற ஒரு சம்பவம் மல்வத்தை, அஸ்கிரிய மடபீடாதிபதிகள் விடயத்தில் கற்பனை கூடப்பண்ண முடியாததாகும். மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி. வண. கலாநிதி சௌந்தரநாயகம் தாக்கப்பட்டது கத்தோலிக்க தலைமைத்துவத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையாகும். இது அனைத்துக் கத்தோலிக்கரினதும், (8ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலையங்களுக்கான அங்கீகாரம் பெறப்பட்டு விட்டது

### - இரா. சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப்பரீட்சை ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் பரீட்சை நிலையங்கள் யாவும் நிறுவப்பட்டு அவற்றை நிர்வகிப்பதற்கான உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரமும், பரீட்சைகள் ஆணையாளரிடம் இருந்து பெற்றுக்கொண்டு விட்டதாக வடமாநில கல்விப்பணிப்பாளர் (8ஆம் பக்கம் பார்க்க)

# முத்தமிழ் விழா ஏப்ரல் முதல் 15 வரை

## வரி விளம்பரம்

### தேவை

சாவித்த சப்பேர, ஒதுக்க சேரன், Gum (கம்), Vicks போத்தல், பவுசி கப்பர பேசல் பொயிண்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; எஸ்; சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப் பாணம்; (B. 2169)

### கொழும்பு ஸ்ருடியோ

புளொக் (Block) புகைப் படம், றபர்சீல, கலர்படம், ஒவியம் பிறேம்போடுதல், கலர் பிலிம், கருள்கள், ஸ்ரிக் கேஸ் முதலியனவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்; (B/2090)

### வானொலி நாடகங்கள்

வானொலி நாடகம் எழுதிப் பழகவேண்டுமா? வாசியுங்கள்; 165 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் கொட்டிக்காரர் கள் 25/- முதலாம்பிள்ளை 30/- 19 நாடகங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், தமிழருவி, யாழ்ப்பாணம்; (R-1216)



## வேலை வாய்ப்பு

### செய்தித்தகவல் மையம் (கோப்பாய்)

தமிழில் நன்கு எழுதக்கூடிய குறித்த ஒரு விடயத்தை சுருக்கி எழுதும் திறனுடைய க. பொ. த உயர்தரம் படித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் யாவும் நேரிலோ அல்லது தபால் மூலமோ 2.04.91 க்கு முன்னர் '' நிர்வாகி '', செய்தித் தகவல் மையம்– கோப்பாய்' என்ற விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப மேலுறையின் இடது பக்க மூலையில் '' வேலை வாய்ப்புக்கான விண்ணப்பம் '' என எழுத வேண்டும். நேர்முகப்பரீட்சை 05. 04. 91 இல் நடைபெறும். நேர்முகப்பரீட்சையின் போது வயது, கல்வித்தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் (கிராமசேவை அலுவலர்) சமர்ப்பிக்க வேண்டும்; மாவீரர் குடும்பத்தினராயின் தமது பகுதியிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதேசப் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதமும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினராயின் கிராம சேவை அலுவலரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமும் மேற்குறிப்பிட்ட பத்திரங்களோடு சமர்ப்பிக்க வேண்டும்; விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தினால் தமிழில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்; வேதனம் வழங்கப்படும்.

– 'நிர்வாகி' (செ. த. மை)

(B- 2210)



## வைத்திய சேவை ஆரம்பம்

கிளிநொச்சியிற் பலகாலம் சேவை செய்த லக்ஷ்மி வைத்தியசாலை 85, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறையில் 30-03-91 முதல் ஆரம்பிப்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

டாக்டர் க. தணிகாசலம்
எம். பி. பி. எஸ் (இலங்கை)

(R-1208)



## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 - 10 - 1951
மறைவு
17 - 03 - 1984
திதி
29 - 03 - 1991

திருமதி
**நாகபூஷணிதேவி**
**மாணிக்கராசா**

அன்பின் உருவமாய் பண்பின் சின்னமாய் எங்கள் அனைவருக்கும் திகழ்ந்த தேவியே! மீளாத்துயிலால் எம் அனைவரையும் மாளாத்துயரில் வாடவைத்துவிட்டு இறைவனடி சேர்ந்து ஏழு ஆண்டுகளானாலும் 'உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களிலிருந்து என்றும் நீங்காது! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

40/1 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்;
(R-1209)

உங்கள் பிரிவால் வாடும்
அன்புக்கணவர், பெற்றோர்,
உறவினர்.






### மார்ச் 29

1985 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
✻ **முருகப்பன் உலகநாதன்** (அக்கரைப்பற்று)

1987 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**கர்ணன்** (பு. இராசா - தர்மக்கேணி- பளை)

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**லெப். சதீஸ்** (திருநாவுக்கரசு சிறீதரன் வல்வெட்டித்துறை)
**சல்மான்**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மாவீரர்களே!

கரிய இருளை விரட்டியடித்து
விடுதலை வேள்விக்கு வித்திட்டு
வீரமரணத்தை அரவணைத்தீர்கள்
உங்கள் நாமம் என்றும் நிலைத்திருக்கும்
புதிய வரலாறுகள் எழுதப்படும்போது
உங்கள் பெயர்களும் பொறிக்கப்படும்.

(கவிதை டானியல் சவுந்தரன்)

✻ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2161)



## கேள்வி அறிவித்தல்

### யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்தவைத்தியப் பகுதியில் சிற்றுண்டிச்சாலைய நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதியாளரினால் 1991—04—10 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும்;

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம் மீளளிக்கப் படாத கட்டணமாக ரூபா 50/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்;

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்;

—பதிவாளர்
25-03-1991

(B-2207)


பாலஸ்தீனரை வெளியேற்றும்

# இஸ்ரேலின் முடிவு அமைதிக்கு வழி வகுக்காது

பாலஸ்தீனர்களை நாடு கடத்துவது என்ற இஸ்ரேலின் முடிவு மேற்கு ஆசியாவில் நீண்டகால நிலையான அமைதிக்கு உதவாது என்று கூறும் ஐ நா; பாதுகாப்புச் சபையின் அறிக்கையினை பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஐ நா; பாதுகாப்புச் சபையினால் நேற்று முன்தினம் இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டபோதும், ஐ! நா சபையின் எல்லா அதிகார பூர்வ மொழிகளிலும் மொழிபெயர்க்கச் செய்வதற்காக இந்த அறிக்கை இன்னமும் வெளியிடவில்லை;

1967 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளில் தொடர்ந்தும் நிலைமை மோசமடைந்து வருவதுகுறித்தும் இந்த அறிக்கை கவலை தெரிவித்துள்ளது.


## முக்கிய அறிவித்தல்

ஆர்; வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறியவந்துள்ளோம். போலி ஆர்; வி. ஜி பீடிகள் விலையிலும் தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர்களுக்குத் அறியத்தருகின்றோம். அசல் ஆர்; வி ஜி. பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன; குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர்; வி: ஜி. பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்; போலி ஆர் வி. ஜி. பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்;

ஆர்: வி: ஜி நிர்வாகம்
58, குருக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(B-2179)



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான பிரமோதூத ஸ்ரீ பங்குனி மீ 18 ஆம் உ (1-4-91) திங்கட்கிழமை பிற்பகல் 1-50 மணிமுதல் 3-01 மணிவரையுள்ள சுபவேளையில்,

| | | |
|---|---|---|
| அமரர் ஆ. நமசிவாயம் அவர்களின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **கிரிகரன் (கிரி)** (உரிமையாளர்: நாகலெட்சுமி இரும்புத் தொழிற்சாலை) அவர்களுக்கும் | ★ ★ ★ ★ | அமரர் இ. சின்னத்துரை அவர்களின் சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி **ஜெயகௌரி** அவர்களுக்கும் |

மேலைவண்ணைநகர் ஸ்ரீ மங்கல மகாகாளி அம்பாள் சந்நிதியில் திருவருளும் பெரியோர் ஆசியும் பொலிய நிகழும் திருமண விழாவிலும் தொடர்ந்து மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்து உபசாரத்திலும் கலந்து சிறப்பித்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்;

மணமகள் இல்லத்தில் 03-04 91 புதன் பி ப. 4 மணிமுதல் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்;

திருமதி நா. நமசிவாயம்
குடும்பத்தினர்
57, ராதாஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்,

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

திருமதி அ. சின்னத்துரை
குடும்பத்தினர்
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை.

(B- 2212)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



இதந்தரு மனையினீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறி
பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தென்னை எதிர்த்
திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே

- பாரதியார்

## எண்ண ஒட்டப்



நாளைய
விடியலுக்காய்...
இன்றைய
துயரங்களைச்
சுமந்து...
நமது
கண்ணீர்
அண்டை
அரசுக்கு...
தெதுறு ஓயாவாய்த்
தெரியவாம்.

இன்றைய
கண்ணீர்த்துளிகள்
நாளைய கடலாய்...
பாரிய படையாய்...

அடக்கு
முறையாளரை
அடித்து
செறிடும்

கிழக்கு
வெளுத்திடும்
நாங்கள்
அகதியாய்...
அலைந்திடும் —

தூரம்
அதிகம் இல்லை.

-பைப்



# விழுதுகள்

**26 1.88** அன்றைய தினம் எமது மண்ணில் இந்தியாவின் குடியரசு தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாடுவதற்கு இந்தியப் படை பெரியளவில் ஏற்பாடு செய்திருந்தது. வெள்ளைக்காரனிடம் தாம் சுதந்திரம் பெற்றதை நினைவு கூர்ந்த இந்தியப் படை தமிழனின் சுதந்திர வேட்கையை அடக்க வெளியே வந்தது. மட்டக்களப்பிலுள்ள அந்த முகாமுக்கு வெளியே சில யார் தூரத்தில் இவர்களை வரவேற்க ஆவலுடன் காத்திருந்தான் சபேசன். பனைவடலிகளின் மறைவில் இவனது நண்பர்கள். உல்லாச நடைபோட்டு வந்த இந்திய இராணுவத்தினர் இவனைக் கண்டதும் கைதட்டிக் கூப்பிட்டார்கள் பால்வடியும் முகத்தையுடைய இவன் "பக்கா எல். ரி. ரியாக" இருப்பான் என அவர்கள் எண்ணவில்லை. ஒரு விளையாட்டுத்தனமாகவே தம்மருகில் அழைத்தார்கள். அந்த அழைப்பு மரண அழைப்பாக மாறும் என அவர்கள் நினைத்திருக்கவில்லை இளைமோர் கண்ணிவெடியைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதலில் இறந்தவர்களைக் கூடத் தூக்காமல் தலை தெறிக்க ஓடினார்கள் இந்தியப்படையினர். இந்தியக் குடியரசு தினத்தை யார் மறந்தாலும் அன்றைய தினத்தில் உயிர் தப்பிய இந்திய இராணுவத்தினரும் கூலிக்காக வந்து மாண்ட இராணுவத்தினரின் குடும்பத்தினரும் மட்டும் மறக்க மாட்டார்கள். அன்றிலிருந்து சபேசனைத் தேடிச் சல்லடை போட்டனர் இந்திய இராணுவத்தினர்.

சபேசன்! பாடசாலைச் சீருடையுடனே இயக்கத்திற்கு வந்தவன். பாாவைக்கு பசுபோன்று இருக்கும் இவன் பயிற்சி முகாமில் ஏனையோருடன் ஒப்பீடுகையில் கலகலப்பற்றவனாகவே இருந்தான். ஆனால் கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் எல்லோர் கவனத்தையும் ஈர்ந்தான், மட்டக்களப்பு மண்ணிலேயே பயிற்சி பெற்ற முதல் அணிப் போராளிகளில் இவனும் ஒருவன்.

பயிற்சி முடிந்தவுடனேயே களத்திலிறங்கினான் ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதல் நடைபெற்ற போது உத்தாக்குதலை முறியடிக்க குப்புறுமுலை அதிரடிப்படை முகாமிலிருந்து படையினர் வெளிவரலாம் எனக் கருதியதால் அதைத் தடுத்து நிறுத்த ஒரு அணி அனுப்பப்பட்டது. அந்த அணியில் இவனும் இடம் பெற்றிருந்தான் படையினரை தடுத்து நிறுத்தினாலேயே போதும். ஆனால் இவனது அணியோ முகாமுக்கு மிக அண்மையிலேயே சென்று முகாமைத் தாக்கத் தொடங்கியது அதனால் வெளியேறும் எண்ணத்தையே கைவிட்டு முகாமைப் பாதுகாப்பதில் முனைந்தனர் படையினர்.

தொடர்ச்சியாக நிகழ்ந்த தாக்குதல்கள் இவனது திறமையை வெளிக்காட்டின. அதனால் இவன் குழுத்தலைவனாக நியமிக்கப்பட்டான். 28-!-87இல் களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கல்லடி ஆகிய முகாம்களிலிருந்து புறப்பட்ட விஷேட அதிரடிப்படையினர் படுவான் கரைப் பகுதியை நோக்கி விரைந்தனர். இப்பகுதியில் சிலநாள் சண்டை நீடித்தது. இவனிற்கோ காய்ச்சல். போராளிகள் அனைவரும் சண்டை செய்து கொண்டிருக்கையில் தான் நோயாளி என்ற ரீதியில் ஓய்வெடுப்பது அவனுக்கு சிரமமாயிருந்தது. ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியுடன் தனது எக்ஸ்புளோடரைப் பொருத்தினான். உறுமியபடி வந்த பவ்ளோர் ஆமட் கார் இவனது கண்ணிவெடியில் சிக்கியது. அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் கே. யூ. பெர்ணான்டோ, உதவி இன்ஸ்பெக்டர் அல்விஸ் உட்பட 13 இராணுவத்தினர் மாண்டனர். ஆனால் கண்ணிவெடியை அழுத்திய இவனால் எழுந்து நடக்க முடியவில்லை. திரும்ப அங்கேயே படுத்துவிட்டான் வட்டமிட்டு குண்டுகளை வீசிக்கொண்டிருந்த பொம்மர்களுக்கும், வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டிருந்த ஹெலிகொப்டர்களுக்கும் மத்தியில் மிகவும் சிரமத்தின் மத்தியில் இவன் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

மாங்கேணி முகாம் தாக்குதல் உட்பட அனேக தாக்குதல்களில் சிறப்பான முறையில் பங்காற்றிய இவன் வடமராட்சியில் நிகழ்ந்த Operation Liberationஐ தொடர்ந்து மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கப்பட்டான். யாழ் கோட்டையிலிருந்து வெளியேறும் இராணுவத்தினரைத் தடுத்து நிறுத்தும் பணியில் சிலகாலம் ஈடுபட்ட இவன் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மீண்டும் மட்டக்களப்புக்கே சென்றான்.

இந்திய இராணுவத்தினர் எம்மீது யுத்தத்தைத் திணித்த போது "சாரம்கட்டிய பையன்களின்" திறமையை அவர்களுக்கு உணர்த்தினான். தொடர்ச்சியாக இவன் நடத்திய தாக்குதல்களால் இந்திய இராணுவத்தினருக்குச் சிம்மசொப்பனமாக விளங்கினான் எங்கும் ஆறுகளால் சூழப்பட்டிருக்கும்மட்டக்களப்பில் தாக்குதல் நடத்திவிட்டு தப்புவதென்பது இலேசானதல்ல. ஆனால் இவனுக்கோ அதுவே நாளாந்தக் கடமையாகவிருந்தது

03-02-88 அன்று களுவாஞ்சிக்குடியில் இருந்து காத்தான்குடியை நோக்கிப் புறப்பட்டது இந்திய இராணுவம் வரிசையாகச் செல்லும் இந்திய இராணுவத்தைக் கவனித்துக்கொண்டிருந்தனர் சபேசனும் அவனது நண்பன் ஒருவனும் கடைசியாகச் செல்லும இராணுவத்தைத் தாக்கி ஆயுதத்தைக் கைப்பற்றத் தீர்மானித்தான் சபேசன். இவனது நண்பன் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்செல்ல பின்னாலிருந்து சென்ற இவன் இராணுவத்தினனைக் குறி பார்த்தான் ஆனால் பிஸ்டல் வெடிக்கவில்லை. பிஸ்டலை வெடிக்கச் செய்வதற்கு தொடர்ச்சியாக இவன் செய்த முயற்சிகள் பலிக்காமல் போகவே இராணுவததைக் கட்டிப்பிடித்து அவனது உப-இயந்திரத் துப்பாக்கியை பறிக்க முயற்சித்தான். ஆனால் மிகுந்த பலசாலியான அந்த இராணுவத்தினன் இவனையே மடக்கமுயற்சித்தான். இதேவேளை முன்னே சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் இச்சம்பவத்தைக் கண்டுவிட்டனர் நிலைமையின் அபாயத்தை உணர்ந்த சபேசன் தனது பல்லால் இராணுவத்



கப்டன் சபேசன்

தினனைக் கடித்தான், வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது பழமொழி இவனோ பல்லும் ஆயுதம் என்பதை நிரூபித்தான். பறிக்கப்பட்ட உபஇயந்திரத் துப்பாக்கியாலேயே அவனது கதையை முடித்த இருவரும் சரமாரியாகப் பொழிந்த ரவைகளினூடே ஆயுதத்துடன் தப்பிச் சென்றனர். இச்சம்பவங்களையெல்லாம் நேரில் பார்த்த மட்டக்களப்பு மக்கள் இவற்றை பெருமையுடன் இன்றும் நினைவு கூருகின்றனர்-

காட்டிக் கொடுப்பது தமிழனின் கூடப்பிறந்த வியாதி. அதுவே சபேசனை நாம் பிரிவதற்கும் காரணமாயிற்று ஒரு நாள் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. தனது பிஸ்டலால் இயன்றவரை போராடிய சபேசன் இறுதியில் சயனைட் குப்பியை உட்கொண்டு தனதும், தான் பிறந்த இனத்தினதும், விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் மானத்தைக் காத்தான்.

இவனோடு போரிட்ட இந்தியப்படைக்கு தலைமை தாங்கிய அதிகாரிக்குக் கூட இவனது துணிவும், திறமையும் இவன்மேல் உயர்ந்த மதிப்பை உண்டாக்கியது. கைகளிலே இவனை ஏந்திவந்த அந்த அதிகாரி குழந்தைத் தனம் மாறாத இவனது முகத்தைப் பார்த்து எனது மகனைப் போன்ற இவன்.. என்று வேறு வார்த்தைகள் கிடைக்காமல் ஒப்படைத்து விட்டுச் சென்றான். எதிரியைக் கூட இவனது மரணம் குலுக்கியது என்றால் இவனை நேசித்த அந்த மட்டக்களப்பு மக்களின் மனத்தில் இவனது மரணம் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்?

இவனால் பயிற்றப்பட்ட போராளிகள் இன்னும் இவனது கடமையைத் தொடர்கிறார்கள் அவர்களின் வாயில் நாளாந்தம் இவன் பெயர் அடிபடுகிறது ஒவ்வொரு சம்பவத்திற்கும் சபேசன் அண்ணா இருக்கும் பாது . என்று இவனது துணிவு நினைவு கூரப்படுகிறது. அதேபோல் இவனது தியாகம் மட்டக்களப்பு மண்ணாலும், மக்களாலும் என்றும நினைவு கூரப்படும்.

## ஒரிஸா வெள்ளைப் புலிக்கு மண்டை ஓட்டிலிருந்து பல்

★ வெள்ளைப் புலிகள் இந்தியாவின் வட மாநிலங்கள் சிலவற்றில் உள்ளன. இவை உலகில் அரிதாகி வரும் விலங்கினமாகும். ஒரிஸ்ஸா மாநிலத்தில் வெள்ளைப் புலிகளுக்கு என்று ஒரு சரணாலயமே உள்ளது. சமீபத்தில் பம்பாய் வைத்தியர்கள் சிலர் புலிப் பல்லுக்கு வைத்தியம் பார்த்திருக்கிறார்கள். வெள்ளைப் புலி ஒன்றுக்குமண்டை ஓட்டிலிருந்துமுளைத்த கூடுதலான பல்லை இந்த மருத்துவர்கள் கண்டார்கள். இந்தப் பற்கள் புலிகளுக்கு முளைப்பது மிக அரிதாகும். இந்த அபூர்வப் பல்லை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றுவதற்கு மூன்று மணிநேரம் எடுத்துக் கொண்டார்கள். அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளது.

# இங்கேயும் தேவைகள்

**இ. பாமா**

பொழுது புலராத பனி படர்ந்த அந்த அதிகாலை வேளை வீட்டின் முன் அந்த அரசமரத்தடியில் எப்போதும் ஓர் மகாநாடு நடக்கும். அதில் கலந்து கொள்வோரில் அதிகம் பேர் வேலைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களும், சமகாலடபிரச்சினைகளால வேலையை இழந்தோ அன்றோ வேலையற்றோரோ ஆகும். ஈழப்பிரச்சினை முதல் வளைகுடாப் பிரச்சினை வரை ஆராய்ந்து காலைத்தனசரி வந்ததும் அதைப்பற்றி விவாதித்த பின்னரே விடை பெறும் இந்த மகாநாட்டில் வசந்தனின் தந்தை தவறாது கலந்து கொளவார். அவனது தந்தை தொண்டையை கனைத்தவண்ணம் கேட்டைத் திறக்கும் சத்தத்தை தொடர்ந்து அவர்களது சம்பாஷணை அந்த அதிகாலை வேளையில் வசந்தனுக்குதெளிவாகக் கேட்டது.

''என்ன இருந்தாலும் எங்கட பெடியள் கெட்டிககாரன்கள் எண்டு தான் சொல்ல வேணும். கட்டுவனில் இருந்து வந்த இராணுவத்தை திருப்பி அனுப்பிப்பாட்டான்கள். இந்தப பெடியள் இல்லையென்டால் நங்கள் நிம்மதியாக இருக்க ஏலுமே'' என்று வசந்தனின் தந்தை சொன்னது அவனது செவிகளில் தெளிவாகக் கேட்டது.

''அது உண்மைதான்'' என்று தம்பர் மாமா ஒத்துக்கொண்டார்.

''இல்லையென்றால், அவன்கள் ஊர் மனைக்கை வந்தால் பிறகுகதைக்கிறதுக்கு உடலில் உயிர் இருக்குமோ தெரியாது'' வசந்தனின் அப்பா சொல்லி சிரிப்பது படுக்கையில் கிடந்த படி அவர்களது சம்பாஷணையைக் கேட்ட வசந்தனுக்கும் சிரிப்பைத் தந்தது.

''தம்பி வசந்தன் இன்னும் நித்திரையே, எழும்பி இந்த கோப்பியை குடி'' அருகில் ஒலித்த தாயின் குரலைக் கேட்ட வசந்தன் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

''நான் அப்பவே முழிச்சிட்டன் அம்மா'' என்றவாறு கோப்பியை வாங்கிப்பருகத் தொடங்கினான்.

''கொஞ்சம் தள்ளு இருப்பம்'' என்றவாறு அவனருகில் அமர்ந்து கொண்டாள் தாய்

''தம்பி வசந்தன், நான் சொல்லுறதை ஒருக்கால் வடிவாய்கேள்'' வசந்தனுக்கு தெரியும் அவனது தாய் என்ன சொல்லப் போகிறாள் என்று. வழமையான தனது சுய புராணத்தை சொல்லப் போகிறாள் அவன் என்றைக்குமே தனக்குள் தீர்மானிக்கும் சிந்தனையை யாரிடமும் கொட்டித் தீர்க்கும் பழக்கம்இல்லாதவன். அதுஅவனது தாயாருக்கு புரியும் அதனால் தான் அடி மேல் அடி என்று தினமும் வேதம் ஓதுகிறாள். வழமையான மௌனத்தை என்றுமே வசந்தன் கைவிட்டது கிடையாது. மிஞ்சினால் ஒரு சிரிப்பு அப்படியா என்பான் அவ்வளவுதான். இன்றும் அவன் மௌனமாகவே இருந்தான்.

''வசந்தன் உன்னைத்தான் சொல்லுறன் கேட்கிறியே'' அம்மா அவனை உலுப்பினாள்

''ஓம் அம்மா'' என்றான் மெதுவாக.

''நீஎங்கட கடைசிப்பிள்ளை எங்கட செல்லபபிள்ளை வீணாக நீ ஏன் கஷ்டப்பட வேணும்''

''அம்மா இதில் என்ன கஷ்டம், இது என்ர தொழில. நான் வைத்தியத்துறையில் சேர்ந்து படித்து டொக்டராக வேணும் என்று ஆசைப் பட்டது என்னை விட நீங்களும அப்பாவும் தானே. இன்றைக்கு ஒரு டொக்டர் எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தான் செய்யிறன் அது என்ற கடமை, அதுவும் இந்த யுத்த காலத்தில் எங்கட மக்களுக்கு போராளிகளுக்கு நான் செய்யிற தொண்டு பற்றி சந்தோஷப்படுகிறன், அதில உங்களுக்கும பெருமைதானே அம்மா'' என்றுமில்லாது இன்று வசந்தன் சற்று நீளமாக பேசியது தாயாருக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும்.

''நான் உன்னைத் தொண்டு செய்ய வேண்டாம் எண்டு சொல்லயில்லை வடிவாச் செய். அதை உன்ர பெரியக்கா வோட போய் இருந்து லண்டனில் செய். நானும் அப்பாவும் சந்தோஷபபடுவம். இல்லையெண்டால் சின்னக்கா வோட போய் அவுஸ்ரேலியாவில செய். இல்லையெண்டால் கனடாவுக்கு போ, அண்ணன் இருக்கிறான். உனக்கு எந்த நாட்டுக்கு போக விருப்பமோ சொல்லு. உடனேயே ஒழுங்கு செய்யலாம். பெரியக்கா உனக்கு சகல ஒழுங்கும் செய்து போட்டு அழுது அழுது எழுதுகிறாள், வரட்டாம் எண்டு. அது உனக்கே தெரியும். ஏன் கல்லுமாதிரி இருக்கிறாய்? இந்த பொம்மர் அடி, செல்அடி இதுக்கை நீ உழைக்கத் தான் வேணுமா? இங்கை நீ முக்கி முக்கி ஒரு வருசத்தில உழைக்கிறதை வெளியில ஒரு மாதத்தில் உழைக்கலாம்'' அம்மா சொல்லி முடித்து பெருமூச்சு விட்டாள்.

''ஏன் அம்மா! இங்கையிருக்கிற பிள்ளைகளுக்கு உயிர் இல்லையா, ஆக நீங்கள் பெற்றது தானா பிள்ளை? தன்ர பிள்ளையையும் பிறர்பிள்ளைகளையும் ஒரே மாதிரி நேசிப்பவள் தான் தாய். உங்களுக்கு பணம் முக்கியம என்டால் சொல்லுங்கோ'' வசந்தன் அமைதியாகக் கேட்டான்.

ஏன்டா என்ர பெத்தவயிறு கொதிக்கிற மாதிரி கதைக்கிறாய் நான் உன்ர பாதுகாப்புக்காக தான் கதைக்கிறன்''

''அம்மா உங்களுக்குப் பயமாக இருந்தால் நீங்கள் எழுதி உங்கட பிள்ளைகளிட்டை போங்கோ'' அவன் நிதானமாக சொன்னான்.

''நீ இப்ப நல்லா கதைக்க பழகிட்டாய், ஏதோ யோசிச்சு செய் எனக்கு வேலை கிடக்கு' என்று கோபமாக வெளியேறும தாயை தொடர்ந்து தனது காலைக் கடன்களை செய்யப் புறப்பட்டான்.

★ ★ ★

''நான் சொல்லும் மட்டும் சொல்லிப்பாத்திட்டன் அவனிட்டை இருந்து ஒன்றுமே அறிய முடியாது. ஒருக்கா நீங்கள் தான் வசந்தனிட்டை சொலலிப்பாருங்கோ, சிலநேரம் அப்பா சொல்லுறார்எண்டுகேட்டாலும் கேட்பான்' மகனை எப்படியும் வெளிநாடு அனுப்பிவிட வேண்டும் என்ற ஆவல் தாயின் வார்த்தைகளில்.

''தாய் சொல்லி கேட்காதவனா தகப்பன் சொல்லி கேட்கப்போகிறான், நான் நினைக்கயில்லை. இந்த அமசடக்கு காரன்களை நம்பக்கூடாது. மற்றவன்கள் என்றால் ஒரே முடிவாக சொல்லிப்போடுவான்கள். எத்தனை பெடியள் வெளியில போக ஏலாமல் தவம் கிடககுதுகள், போய் எத்தனை திரும்பி வந்ததும் திரும்பி போக எவ்வளவை செலவழிக்குதுகள் ம, எங்களுக்கு வந்தது இப்படி இருக்க என்ன செய்ய?



''எனக்கும் உது தான் கவலையப்பா வசந்தனை கேட்டால்தானே அந்தா வசந்தனும்வரான்' தாயின் குரல் மெதுவாக தாழ்ந்தது.

''என்ன வசந்தன் ஏன் இண்டைக்கு இவ்வளவு நேரம், கழிச்சு வாறாய்'' வசந்தனின் தந்தை பேச்சை தொடங்கினார்.

''ஏன் அப்பா நீங்கள் தமிழீழத்தில் தானே இருக்கிறீங்கள் இண்டைக்கு எங்கும் பரவலாக அடிச்ச பொம்மர் தாக்குதல் நடந்தது தெரியாதா? அப்பா, எத்தனை எங்கட சனங்கள், குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் செத்து காயப்பட்டு கொண்டு வந்திலம் தெரியுமா? அந்தக் கோர காட்சியை பார்த்திட்டு வீட்டுக்கை வந்து முட்டையிட வா சொல்லுறீங்கள்! நான் ஒரு டொக்டர். என்ர கடமையை நான் எந்த நிமிசமும் எந்த நேரமும் செய்யத்தயார்'' வசந்தனின் சூடான வார்த்தைகள் தந்தையை மௌனமாக இருக்கச் செய்தது.

''இந்தா தம்பி தேத்தண்ணியை குடி களைச்சுபபோய் வந்திருக்கிறாய்'' என்றவாறு தேனீரை மகனிடம் நீட்டினார் தாயார்.

''வசந்தன் நீ அப்பாவை கோவிககாதை அவர் உன்ர அன்பிலும் அக்கறையிலும் தான் கதைக்கிறார். நீ வெளியில போய்ட்டு வரும் வரை நாங்கள் நெஞ்சில் நெருப்பை கட்டிக்கொண்டு இருக்கிறம் நீ வெளியில போய்டடால் நாங்கள் நிம்மதியாக இருப்பம்''

''அம்மா, அப்பா! தயவு செய்து நான் சொல்லுறதை கேளுங்கோ ஒவ்வொரு தாய் தகப்பனும் பிள்ளைகளை கஷ்டப்பட்டுத்தான் பெற்று வளர்க்கினம். ஆயுத போராட்டம் வளர்ச்சியடைய முதல் சிலர் இருந்து உழைச்சினம் அனேகர் படிக்கிறது இங்கை உழைக்கிறது சேவை செய்யிறது எல்லாமவோ வெள்ளைத்தோல் காரனுக்குத்தான் அப்பா! இன்றைய நாட்டு நிலைமையில் எங்கட மக்கள் வைத்திய வசதியில்லாமல் மருந்து இல்லாமல் உயிர்களை இழக்கினம். அதைவிட எங்கட நாட்டைக் காக்கப்புறப்பட்ட போராளிகளின்ர உயிரை காக்கிறது எங்கட கடமையில்லையா? வைத்திய வசதியின்றி இவ்வளவு சனங்கள் அல்லல்படும்போது நாங்கள் வெளியில் போய் உழைப்பதில் என்ன சந்தோஷம், என்ன நிம்மதி? இந்த எங்கட மக்களுக்கு நாங்கள் உதவி செய்யாமல், என்ன பிரயோசனம், ஒரு மனிதனின்ர இன்பத்தில் பங்கெடுக்க ஆயிரம் பேர் வருவினம். ஆனால் துன்பத்தில் பங்கு எடுக்கவருகிறவைமிகக் குறைவு என்னை பொறுத்தவரை இந்த கால கட்டத்தில் எங்கள் மக்கள் படுகிறகஷ்டத்துல்நானும்

## சிறுகதை

பங்கெடுத்து சேவை செய்ய வேணும் அது என்ர கடமை, இலட்சியம் அப்பா. நாங்கள் தமிழர். இந்த நாட்டின் சுதந்திரத்தில் எங்களுக்கும் பங்கு இருக்கு. அதை மறக்காதேங்கோ.'' என்றவாறு எந்த பதிலையும் எதிர்பாராமல் நடக்கும் மைந்தனைப் பார்த்து திகைத்து நின்றனர் பெற்றோர்.

★ ★ ★

''மங்களம், மங்களம் இங்கை ஒருக்கா வந்திட்டுப் போம்'' முனகலாக ஒலித்த குரலைக் கேட்டு.

''என்னப்பா ஏதும் அலுவலே'' என்றவாறு வந்த மங்களத்திடம் சொல்ல முடியாமல் வேதனையால் அவதிப்படும் கணவனைக் கண்டு பதறிப்போனாள் மங்களம்.

''எனக்கு எனக்கு நெஞ்சுக்கை நோவுது கொஞ்ச தண்ணீர் தாரும்''

'இதென்ன இப்படி வேர்த்து ஊத்துது வசந்தனும் இல்லை கடவுளே, இந்தாங்கோ தண்ணியை மெதுவாக குடியுங்கோ நான் முன் வீட்டு சத்தியனை கூப்பிடுவம் ஆஸ்பத்திரிக்கு போக'' சொன்ன மங்களம் பதிலுக்குக்காத்திராமல் ஓடிச் சென்று சத்தியனை அழைத்து ஒரு ஆட்டோவை அழைத்துவரச் செய்து வைத்திய சாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள் மங்களமும் சத்தியனும்–

''கடவுளே என்ர தாலியை காப்பாற்று என்ர புருஷனின்ர உயிரைக்காப்பாற்று, தமபி சத்தியன் ஏன் ஆஸ்பத்திரியில் ஒருடொக்டர்ஸும் இல்லையே

''இல்லை மாமி இருக்கிற வைத்தியர், வைத்திய நிபுணர் எல்லாம் வெளியில் போயிட்டினம். இருக்கிறது கொஞ்சப் பேர் இபப சற்றுக்கு முதல் அடிச்ச பொம்மரால் காயப்பட்டவையை கொண்டு வந்து அவசர சிகிச்சை நடக்குது'' என்றான் சத்தியன்.

''எங்கட மகன் டொக்டராக இருந்தும் அவனின்ர தகப்பனுக்கு இந்த நிலைமையா கடவுளே, இது என்ன சோதனை''!

''பிரச்சினை என்று வைத்தியர் எல்லாம் வெளிநாடு ஓடினதால தான் இது'' என்றான் சலிப்பாகச் சத்தியன்.

(7 ஆம் பக்கம் பார்க்க)



கவிதை

## எரிமலை உணர்வாகி...

இறந்த காலத்துச் சதிகள்
நெஞ்சுகள் மீது
காயங்களைப பதியம் போட்ட
கணப்பொழுதின் கொடூரம்;

மிருகப் புத்திகளில்
மனம் நனைத்து
மானுட வேட்கைகளை
நெருப்புப் பொறிவைத்து
நீறாக்கிய வெறி;

விலங்குகள் உடைத்து
வெளியேறத் துடித்த
சிவப்புச் சூரியன்களை
முகாம் வதைகளை அள்ளிக் கொட்டி
முடிமறைக்கப் பார்த்த
முட்டாள் தனங்கள்;

இவை யாவும்
எழுச்சிகளைக் கக்கும்
எரிமலைகளுக்கு முன்னால்
சாம்பலாயப் போகும்:

அப்போது-
வெறியால் பீடித்துப் போன
அத்தனை சிந்தனைகளும்
அழுகி நாறும்;


துயர்களை தரிசனப்படுத்திய
ஆதிக்க வீச்சுக்களை
இளைய சூறாவளிகள்
கேள்விகள் கேட்க-
கேலிகள் செய்ய-
புரட்சியின் உருவாக்கம்
அங்கீகாரம் பெறும்;

நாளை-
மண்ணோடு மக்கள்
சுதந்திரப் பெருங்கடலெங்கும்
மனங்குளித்து மகிழ்வர்;

எம்; எல்; எம். அன்ஸார்
காத்தான்குடி

# உயர் தொழில்நுட்ப 'அபச்சேஸ்'

# ஏ. கே. 47 முன் தாக்குப்பிடிக்காது




1. இருட்டில் தாழ்வான மட்டத்தில் பறக்க உதவுகிறது: (N-VS)

2: ராடர் எச்சரிக்கை - எதிரியின் ராடரில் அபச்சேஸ் விழும்போது எச்சரிக்கிறது [PWR]

3: ஐந்து மைல்களுக்கிடையில் உள்ள தாங்கிகளை அழிக்கவல்ல லேசர் கதிரியக்க ஏவுகணை (HELL FIRE)

4: எதிரி இலக்குகளை இரவிலும் பகலிலும் அடையாளம்காண வல்லது: பெருப்பித்தும் காட்டும்: [TADS]

5: ஆகாய, தரைத்தாக்குதலுக்கு உகந்த 70 எம்: எம் ஏவுகணை (HYPRA)

6: 30 எம்: எம்: சங்கிலித் துப்பாக்கி 12000 வேட்டுக்களை உடையது: (CANNON)

அமெரிக்கத்தரைப்படை உலங்கு வானூர்தி (ஹெலிகொப்டர்)களில அபச்சஸ் என்றழைக்கப்படும் உலங்கு வானூர்தி உலகப் பிரசித்தமானது உயர்ந்த தொழில் நுண்ணியல் தயாரிப்பான இந்தரக உலங்கு வானூர்தி மெலிந்த இடையுள்ள குளவியைப் போன்ற வடிவமைப்பினைக் கொண்டதாகும். முன்பக்கத்தில் மூட்டைப் பூச்சியினது கண்களைப் போன்ற பயங்கரமான கண்கள்! பாரசீக வளைகுடாப் போரின்போது, ஈராக்கிய துருப்புகளின் சரமாரியான தாகுதலினிடையிலும் வியூகம் வகுத்து முன்னேறிய ஈராக்கின் எதிரணித் துருப்புகளுக்கு பக்கபலமாய் அபச்சேஸ் செயற்பட்டது. இருள் மயமான வேளையில், வஞ்சனையான நோக்குடன நகர்ந்துவரும் தாங்கி போன்ற இந்த ஆகாயத்தாங்கி Tank அமெரிக்க அணியைச் சேர்ந்த படைகளுக்கு யுத்தமுனையில் நன்நம்பிக்கையைத் தருவதாகும்.

அபச்சேஸ் பல மைல்கள் தொலைவில் வரும் எதிரிகளை இனங்கண்டு கொள்வதோடு, எதிரிகளின் இலக்குகளைப் பெரிதாக்கியும் காட்டக் கூடியது இந்த உலங்கு வானூர்தியில் லேசர் கதிர்களால் இயக்கப்படும் ஹெல்ப் பயர் (Hell Fire) ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இது வளைகுடாப் போரில் பல சாகசங்களைப்புரிந்ததாக அமெரிக்க இராணுவ தரப்பில் பேசப்படுகிறது. அபச்சேஸ் யுத்தகாலத்தில் புரிந்ததை இனிமேல் புரியக்கூடிய சேவைகளைக் கொண்டே அதன் சேவையைத் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கும்.

அபச்சேஸ் ஆச்சரியமானது தான். எது எப்படியாயினும் அபச்சேஸ் வான் ஊர்தியை திறமையான ஒரு தயாரிப்பாகவும் கருத இடமில்லை. இயந்திரக் கோளாறு, விசிறி அலகு உடைதல், துப்பாக்கி சிக்கிக் கொள்ளுதல் ஆகியன இந்த வானூர்தியின் பலஹீனங்களாகும். தவிரவும், கடந்த நவம்பரில் சவூதி அரேபியாவில் நிலைகொண்டு நின்ற அபச்சேஸ் திடீரென வேட்டுகளைத் தீர்த்தது. ஆயுதக் கிடங்கொன்று இதனால தீப்பற்றிக் கொண்டது கடந்த மாதம் யுத்த முனையில் அபச்சேஸ் தானாக எரியத் தொடங்கியது.

அமெரிக்க வான் படை இரண்டாவது உலகப் போரில் பின்னால் தரைப் படையுடனான அதனது தொடர்பை விலக்காமல் விலக்கிக் கொண்டது அமெரிக்க வான் படை இன்று குண்டு வீச்சு விமானங்களிலும். ஏவுகணைகளிலும் அதன் கவனத்தைத் திரும்பியுள்ளது.

19--ல் அபச்சேஸ் விமானம் கட்டும் தொழிற்சாலையிலிருந்து வெளிவந்ததும் சோவியத் தாங்கிகளை அழிக்கும் வல்லமை கொண்டதாக அது கருதப்பட்டது. Soviet Tank Killer என்றே எது வருணிக்கப்பட்டது. வியட்நாம் யுத்தகாலக் கோம்ரா (Cobra) அபச்சேஸ் வானூர்த்தியை விடச்சிறந்தது என்று அமெரிக்கவான் படை அதிகாரி ஒருவர் கருதுகிறார். அமெரிக்காவில் அதிசக்திவாய்ந்த F-1- விமானத்திற்கு அபச்சேஸ் சமமானது என்பது அமெரிக்கா தரைப்படையின் அபிப்பிராயமாகும்.

1.5 - 2.4 மணிநேரம் அபச்சேஸ் பறக்கும்போது ஒரு முறையாவது இயந்திரக் கோளாறு ஏற்படுகிறதாம். அமெரிக்கா பனாமாவை ஆக்கிரமித்த சமயம் யுத்த முனையில் அபச்சேஸின் பணி பயன் பொருத்தமானதாய் இல்லையாம் அபச்சேஸ் பாலைவன யுத்தத்தை எதிர்பார்த்து தயாரிக்கப்பட்டதல்ல. பாலைவனச் சூழலில் இதன் உபகரணங்கள பழுதடைந்து துருப்பிடிக்கக் கூடிய நிலையில் காணப்பட்டன. இதனால் உபகரணங்களுக்கு 'உறை' போட வேண்டிய அவசிய அவசரம் ஏற்பட்டது. அமெரிக்க விமானப்படையின் A - 10 க்கான உற்பத்திச் செலவை விட அபச்சேஸின் உற்பத்திச் செலவும் அதிகமானது, ஆனால் வளைகுடாப் போரில் போர் முனைக்குச் சென்று அபச்சேஸ் விமானங்கள் வெற்றியுடன் திரும்பி

(7ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலை செய்வதற்குரிய காரணங்களும்

# தடுப்பதற்குரிய சில விதிமுறைகளும்

தற்கொலை செய்பவர்களுக்குரிய சரியான புள்ளிவிபரங்கள் இல்லாவிட்டாலும், தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலங்களில் அதிகரிதது வருவதை அன்றாடம் வெளிவரும பத்திரிகைச் செய்திகளிலும் நடைமுறை வாழ்க்கையில இருந்தும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

**தற்கொலைக்குரிய சில அடிப்படைக் குணாதிசயங்கள்.**

ஆண்களைவிட பெண்களே அதிகமாக தற்கொலை அல்லது தற்கொலை செய்ய முயற்சிக்கிறார்கள். அதிலும் 15இற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டோரிலே இப்பிரச்சினை அதிகமாகக் காணப்படுகின்றது 12 வயதுக்குக்குறைந்தவர்கள் தற்கொலை செய்வது மிகக்குறைவாகும். அடுத்த ஆபத்தான வயதினர் 20இற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டோர். மேலும் சமுதாயத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளோரிடம் இப்பிரச்சினை அதிகரித்துக்காணப்படுகிறது. வேலையில்லாததும் ஒரு முக்கிய காரணமாகும். வேலை செய்பவர்களிலும் பார்க்க வேலை இல்லாதவர்களிடம் இந்த ஆபத்து ஏறக்குறைய 10-15 சதவீதம் அதிகரித்துக் காணப்படுகிறது.

**தற்கொலை செய்வதற்குரிய காரணங்களும் உள்நோக்கங்களும்**

தற்கொலை செய்வோம் என்கிற முடிவு பெரும்பாலும் ஒருமணி நேரத்திற்குள் சில சமயங்களில் ஒரு சிலநிமிடங்களுக்குள் எடுக்கப்படுகின்ற முடிவாகும். இப்படிப்பட்டவர்கள் தாம் தற்கொலை செய்யப்போவதைப்பற்றி அல்லது தற்கொலைசெய்கிற எண்ணங்களைப் பற்றி அடிக்கடி கதைப்பார்கள் தமது பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் இது ஒன்றுதான் தீர்வு என்று சொல்லுவார்கள். இன்னும் சிலர் தமது ஆத்திரத்தை வெளிககாட்ட குற்றத்திற்குப் பரிகாரம்காண மற்றவர்களை கவர அல்லது சமமதிக்கவைக்க தமதுவேதனையை வெளிக்காட்ட இது ஒன்றுதான் வழி என்று செய்கிறவர்கள் மற்றும குடும்பததில் தகராறு. அனேகமாக கணவன் மனைவிக்கிடையே வளரும் கசப்பான உணர்வு. வேலைத்தலத்தில் பிரச்சினை, பரீட்சையில் தோல்வி, பணக்கஷ்டம், சட்டவிரோதமான செயலில ஈடுபடுதல், உறவினர்கள் நண்பர்கள் யாருமே இல்லாத தனிமை, அடிக்கடி அதிகளவில் மதுபானம் மற்றும் போதை வஸ்துககள் உட்கொள்ளல், மனநோயாளர். சடுதியான தாங்கமுடியாத இழப்பு, உதாரணமாக தாய் மகனை இழத்தல், மனைவி கணவனைப் பிரிதல் அல்லது இழத்தல் போன்றவை தற்கொலை செய்யும அல்லது தற்கொலை செய்ய முயற்சிக்கும் ஆபத்தை அதிகரிக்கும்.

**இன்னுமொருமுறை தற்கொலை செய்ய முயற்சிப்பதற்குரிய குணாதிசயங்களும் ஆபத்துக்களும்**

முன்னைய முயற்சியின் போது வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுமளவுக்கு நிலைமை மோசமாகியிருததல். மதுபானம் போதைவஸ்து என்பவற்றைப் பாவித்து தற்போது அதனைப்பாவிப்பதனால்பிரச்சினைக்குள்ளாகுபவர்கள் தன்னுடையதனித்துவத்தில் பிரச்சினைக்குரியவர்கள் குடும்ப உறவினர்களுடனோ, நண்பர்களுடனோ வாழாதவர்கள், குற்றம் புரிந்தவர்கள். வேலையில்லாதவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் போன்றவர்கள் முன்பு ஒரு முறை தற்கொலை செய்ய முயற்சி செய்திருந்தால் இன்னுமொருமுறை தற்கொலை செய்ய முயற்சிக்கும ஆபதது அதிகரித்துககாணப்படுகிறது.

**தற்கொலை செய்ய முயற்சி செய்தவர் மீண்டும் தற்கொலை செய்யும் ஆபத்துக்குரிய குணாதிசயங்கள்**

45 வயதுக்கு மேற்பட்ட அதுவும் குறிப்பாக ஆண்கள் முனபொருமுறை தற்கொலை செய்ய முயன்றிருந்தால்அவர் மறுமுறை தற்கொலை செய்யும் ஆபத்திருக்கிறது. வேலை இல்லாதவர், வேலையிலிருந்து ஒய்வுபெற்றவர். விவாகரத்துச் செய்தவர், மனைவி அல்லதுகணவனை இழந்தவர்கள், தனிமையில் வாழ்பவர்கள், கடுமையான உடல் சுகயீனமுடையவர்கள், மனநோயாளர்கள் போன்றவர்கள் முன்பு முயன்றிருந்தால் மறு முறை தற்கொலை செய்யும ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது

**'தற்கொலை செய்ய முயற்சித்தவரைப் பற்றி பெறப்படவேண்டிய முக்கியமான தகவல்கள்**

எப்படிப்பட்ட சம்பவங்கள் அவரை அப்படிப்பட்ட தொரு முடிவுக்குக் கொண்டுபோனதென்பதை அறியவேண்டும். தற்கொலை செய்யக் கூடிய உள்நோக்கத்தினளவு, அந்த நோயாளி தற்போது எதிர் கொள்ளும் பிரச்சினைகள், மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளாரா அவருடைய குடும்ப நிலை அவருக்கிருக்கிற வளங்கள் உதவிகள் இன்னுமொரு முறை அவர் தறகொலை செய்யக் கூடிய ஆபத்து என்பவற்றை அறியவேண்டும்.

**தற்கொலை செய்ய முயற்சிப்பதால் அல்லது தற்கொலை செய்வதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்**

தற்கொலை செய்ய முயற்சிப்பதால் மிகநெருங்கிய உறவினர்களிடம் நணபர்களிடமிருந்து ஒருவிதமான உதவியையும, ஆதரவையும், கவனிப்பையும் பெறலாம ஆனாலஒரு முறைதற்கொலை செய்யமுயற்சிதவர் மீண்டும் தற்கொலை

## மருத்துவபீடம்

செய்ய முயற்சிக்கும் ஆபத்து அதிகரிப்பதாலும் அவ்வாறு மீணடுமொருமுறை முயற்சிக்கும்போது அனேகமாக உயிராபத்து ஏற்படும். அதுவும் முதல் மூன்றுமாதங்களுக்குள் தற்கொலை செய்யும் ஆபகது இன்னும் அதிகரித்துக் காணப்படுகிறது.

**தடுப்பதற்கு சில ஆலோசனைகள்**

முதன்முதலாக ஒருவர் தற்கொலை செய்ய முயற்சிப்பதை அல்லது தற்கொலை செய்வதை கடுப்பது மிகவும் கடினம். எனினும் இரண்டாம் முறையும் முயற்சிக்காமலிருக்க நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும், வைத்தியர்களும், ஊரிலுள்ளவர்களும் நிறைய உதவிகள் செய்யலாம். முதன் முறையாக ஏதோ ஒரு காரணத்திற்காக அவ்வாறு முயற்சித்தவரை, மேலும் கிண்டல்கள், நையாண்டி செய்து அல்லது அவருக்கு அல்லது அவருடைய நெருங்கிய குடும்பத்தவருக்குபழி அவதூறு ஏற்படுவதுபோல் பேசுவதனாலும், நடப்பதனாலும் அவர் மேலும் தனிமைப்படுத்தப் பட்டு மனநிலைமோசமடைந்து ஆபத்தைத்தேடிக் கொள்ள நேரிடும் இதனை ஒவ்வொருவரும் தடுக்கலாம். ஒருமுறை முயற்சி செய்த

**டாக். சிர்மாறன்**

வரை அதுவும் குறிப்பாக முதல் மூன்றுமாதத்திற்குள் அவருடைய நடை, உடை, பாவனையை மிகநெருங்கிய உறவினர்கள் கண்காணிக்க வேண்டும். மீண்டும் முயற்சிக்கிறாரா உதாரணமாக தனிமையை விரும்புகிறாரா, சந்தேகத்திற்கிடமான முறையில் நடக்கிறாரா, தற்கொலையைப்பற்றி யாரிடமும் கதைக்கிறாரா எது மிகவும் சுலபமான முறை என்பதை ஆராய்கிறாரா நித்திரைக் குளிகைகள், பூச்சிமருந்துகள் என்று எதனையும் சேகரிக்கிறாரா? என்பதை அவதானிக்க வேண்டும். மேலும் அவரை தற்கொலை செய்ய முயற்சிக்கதூண்டியபிரச்சினைகள். உதாரணமாக மனைவி அல்லது கணவனுடனான குடும்பப்பிரச்சினை, குடியினால் அவஸ்தைப்படுதல், பொருளாதாரப் பிரச்சினை கடன்தொல்லை. வேலையில்லாமை, தனிமை, உதவியின்மை ஆறுதலின்மை போன்ற பிரச்சினைகளை முடியுமானளவுக்கு மிகநெருங்கிய உறவினர்கள் நண்பர்கள தெரிந்தவர்கள் உதவி செய்யக் கூடியவர்கள் மனம்திறந்து கதைப்பதால் ஓரளவுக்கு இந்த பிரச்சினையைக் குறைத்து அநியாயமாகப் பலியாகும் சிலரைக் காப்பாற்றலாம்.

# தாயகத்துக்கு பெருமைசேர்த்த

# தமிழ்மகன்

''இன்னிசை நேர் யாழ் நூலிசை பரப்பினான் புலமை மன்னு விபுலாநந்த மாமுனிவன் – தொன்மைத் தமிழ்ப் புலமை மல்கத் தமிழ்வளர்த்து வாழ்க இமிழ்கடல் சூழ் ஞாலத் தினிது''

'நரம்பின் மறையெனத் தொல்காப்பியரும், 'இசையோடு சிவணிய யாழின்நூல்' எனக் கொங்கு வேளிரும் குறிப்பிட்ட யாழ் நூற் பொருள், இருந்த இடம தெரியாது மறைந்தொழிந்த வேளையிலே பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள அரும்பொருள்களை நுண்ணிதிற் கண்டுணர்ந்து, யாழ் நூல் என்னும் தமிழிசை நூலினைத் தந்தவர் விபுலானந்த அடிகள் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையினுள்ளே, யாழ் ஆசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விளக்கமாக அமைந்தது யாழ் நூல். தமிழிசைத்திறமனைத்தும் பண்டைய காலந்தொடங்கி நாளுந் நாளும் சிறுகச் சிறுக வளர்ந்து பண்பட்ட வரலாற்றின் தெளிவான விளக்கமாகவும் யாழ் நூல் அமைந்துள்ளது.

புலவர், பாணர், கூத்தர் என்போரால் இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைகளிலும் வளர்ச்சி கண்ட தமிழ் மொழியின் இசைத்தமிழ் மரபின் அருங்கல நிதியத்தை

**26-03-1991 இல் சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு ஆரம்பமாகியுள்ளது. தாயகத்திற்குப் பெருமை சேர்த்த தமிழ் மகனை நினைவு கூருமுகமாக இது படைக்கப்பட்டுள்ளது**

14 வருடங்களுக்கு மேலாகத் தேடித் தொகுத்த பெருமை விபுலானந்த அடிகளாரைச் சேரும். தமிழிசை வரலாற்றில் யாழ் நூல் தனியிடம் பெறுவதாகும, முளரியாழ், சுருதிவீணை, பாரிசாதவீணை சதுர்தண்டிவீணை என்றவாறான இசைக்கருவிகளின் பவனிக்கு விபுலாநந்த அடிகளார் ஆற்றிய பணி ஈழத்தமிழரைப் பெருமைப்பட வைப்பதாகும். ஏனெனில் தென் தமிழீழத்தின் மட்டக்களப்பையடுத்த காரைதீவுக் கிராமத்திலே சாமித்தம்பி - கண்ணம்மை தம்பதிகளின் புதல்வனாக 26-03-1892ல் மயில்வாகனம் என்ற இயற்பெயருடன் பிறந்தவர் சுவாமி விபுலாநந்தர் எனப்படும் விபுலாநந்த அடிகள்.

ஆரம்பக் கல்வியைகல்முனை மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் பின் மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரியிலும் பயின்ற மயில்வாகனர் 16 ஆம் வயதிலேயே கேம்பிறிட்ஜ் பரீட்சையில் சித்திபெற்றார். தமிழுடன், ஆங்கிலம், இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், அரபி எனப் பலமொழிகளில் தேர்ச்சி பெற்றவராக மிளிர்ந்தார். மட்டக்களப்பில் ஆசிரியப் பணியாற்றிய பின் கொழும்பில் ஆசிரிய பயிற்சித் தேர்வை நிறைவு செய்து கொண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தலைமை ஆசிரியராக 1920 ல் பொறுப்பேற்றார். ''ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்' என்ற பெயரில் தமிழ் மொழி விருத்திக்கான சங்கமொன்றைத் தாபித்துச் செயற்பட்ட அவர் 1922ல் துறவற நிலை பூண்டு சென்னை சென்று 1924 இல் விபுலாநந்தராக ''ஞான உபதேசம்'' பெற்றார். மடாலய வாழ்க்கையில் உ. வே. சாமிநாதையர், யோகிசுத்தானந்த பாரதி ஆகியோருடன் நட்புப் பூண்ட விபுலாநந்த அடிகள் 1925ல் இலங்கை திரும்பி காரைதீவு சாரதா வித்தியாலயம், கல்லடி சிவானந்த வித்தியாலயம் என்பவற்றைத் தாபித்தார்.



விபுலாநந்த அடிகள்

''ஆங்கில வாணி'' பூஞ்சோலைக் காவலன்'' போன்ற கட்டுரைகளின் மூலம் புகழ் பெற்ற விபுலாநந்த அடிகள், ஷேக்ஸ்பியர் நாடகங்களையும், தனஞ்செயனார் தந்த தசருபங்களையும் மூலமாகக் கொண்டு சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நூன் முடிவுகளை விளக்குவதற்காக ''மதங்க சூளாமணி'' என்னும் நூலை எழுதினார்.

1931 ஆடியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பதவியேற்று சிறப்பாக பணியாற்றிய விபுலாநந்த அடிகள் இலங்கை பல்கலைக் கழகத்திலும் தமிழ்த்துறை விரிவுரையாளராக சேவையாற்றினார்.

பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவில் வடநாட்டவர்களால் நடத்தப்பட்ட 'பிரபுத்தபாரதம்' என்னும் இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர் சுவாமி விபுலாநந்தர், இந்தியதேசிய விடுதலைக்கான போராட்டத்தை முழுமையாக ஆதரித்துச் செயற்பட்ட பிரபுத்த பாரதத்தின் ஆசிரியராக ஈழத்தமிழகத்தை சேர்ந்த ஒருவர் பணியாற்றியமை ஈழத்தாயைப் பெருமைப்படுத்துவதாகும்.

மேலும் விஞ்ஞானச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை ஆக்கும் முகமாக 1934ல் சென்னையில் தோற்றுவிக்கப்பட்ட ''சொல்லாக்கக் கழகத்தின்'' உறுப்பினராகவும் விபுலாநந்த அடிகள் செயற்பட்டார். வளர்ந்து கொண்டு வரும் விஞ்ஞானத்தை, வளர்ந்து வரும் தமிழும் ஏற்றுக்கொள்ள வசதியாக மேலும் மேலும் பல புதுக்கலைச் சொற்களை ஆக்க வேண்டியிருக்கிறது இப்பணியின் குறிப்பிடத்தக்க முன்னோடியாகத் திகழ்ந்த விபுலாநந்த அடிகளாரைப் பெற்றமைக்காக ஈழத் தமிழகமும், குறிப்பாக தென்தமிழீழமும் பெருமைகொள்ளுதல் பொருத்தமுடையதே.


சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

தமிழ்த்தொண்டர்

''ஈழகேசரி'' நா. பொன்னையா

நாற்பதாவது நினைவு தினம்

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 31-03-1991 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-00 மணி

தலைமை: கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்

நினைவுப் பேருரை: ''யாழ்ப்பாணத்தில் 'தொடர்பும்' பண்பாடும்
1930 ஆம் தசாப்தத்து ஈழகேசரிப் பத்திரிகையைத் தளமாகக் கொண்ட ஒரு தொடர்பியல் நோக்கு''

கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர்,
(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரசார பிரிவு,
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

க. இராமநாதன்
பிரசார செயலாளர்

(R-1815)





தமிழீழ விடியலுக்காய்த் தன்னையே அர்ப்பணித்த அன்னையாம் பூபதிக்கு எங்களின்

அஞ்சலி!

சாயி மெடிக்கல் அக்கடமி

6, பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கை, யாழ்நகர்.

எஸ். எம். ஏ. மருத்துவக் கல்லூரி

இல: 54, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

இல: 10. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B-2183)


## பல்கலைக்கழகத்தில்



யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி போதனாசிரியை செல்வி விக்னேஸ்வரி சரவணமுத்துவின் நடன நிகழ்ச்சி இன்று காலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

## எட்டு வயதுச் சிறுமி உயர்தர பரீட்சை

★ எட்டு வயதுச் சிறுமி எத்தனையாவது வகுப்புப் பரீட்சைக்குத் தோற்றலாம்? 3ஆம், 4ஆம் வகுப்புப் பரீட்சை என்று தான் எண்ணத் தோன்றும். ஆனால் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுமி முஜேனி சக்ரவர்த்தி உயர்தர பள்ளிப்பரீட்சை எழுதுவது என்றால் அது வியக்கக் கூடியதுதான். மேற்கு வங்காளக் கல்வி வரலாற்றிலேயே எட்டு வயதுச் சிறுமி உயர்தரப் பள்ளிப் பரீட்சை எழுதியது இதுதான் முதற்தடவை. ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்ற ஆகக்கூடியது பதினைந்து வயது நிரம்பியிருக்கவேண்டும்.

சிறுமியின் கெட்டித்தனம், கல்வியாளரின் பரிந்துரை, பத்திரிகைகளின் வேண்டுகோள் ஆகியவற்றின் காரணமாகவே முஜேனி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டாள்.

## தன் வினை

அமெரிக்க அரசாங்கத்தால் பென்ரகனுக்கு ஒருஇரகசியக்கட்டளை, விரைவாகவும் பெருமளவிலும் மக்களைக் கொல்லக்கூடிய ஓர் உயிரியல் ஆயுதத்திற்கான முயற்சியில் ஈடுபடும்படி. இக்கட்டளைக்கமைவாக சனசந்தடியற்ற இரகசிய இடத்திலுள்ள ஓர் ஆய்வுகூடத்தில் வைரஸ் நோய்க்கிருமி கண்டுபிடிக்கப்பட்டது. இதனைப் பரிசோதிக்க இராணுவ ஆயுள் தண்டனைக் குற்றவாளிகள் மூவர் தெரிவு செய்யப்பட்டனர் உயிர்தப்பினால் விடுதலை என்ற நிபந்தனையுடன். பரிசோதனையின்போது ஒருவர் இறந்துவிட்டார். இது மிகவும் வேகம் குறைந்த நோயென முடிவு செய்யப்பட்டது. மற்றைய இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அவர்கள்தான் எயிட்ஸ் நோயின் முன்காவிகள் எனவே அது தங்களை அழிக்கப்போகின்றதெனவோ அவர்கள் உணரவில்லை. இந்நோய்க்கிருமியின் கருக்கட்டல் காலத்தினைக் கணிப்பதில் ஆராய்ச்சியாளர் தவறிவிட்டனர். இன்று எயிட்ஸ் நோயாளர்களில் அறுபதுவீதத்திற்கு மேற்பட்டோர் அமெரிக்கர்களே.

-சோவியத் நாடு

# இந்தியாவின் பத்தாவது லோக்சபா தேர்தல்

உலகின் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் மக்களவைத் (லோக்சபா) தேர்தல் மே மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளது. இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் நடைபெறும் பத்தாவது பொதுத் தேர்தல் இதுவாகும். மொத்தமுள்ள 546 லோக்சபா தொகுதிகளுக்கு 50 கோடியே 10 இலட்சம் வாக்காளர்கள்வாக்களிக்கதகுதி பெற்றுள்ளனர்.

இத்தேர்தல் மத்தியில் தேசிய கட்சிகளும் பிராந்தியக் கட்சிகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் போட்டியிடுகின்றன. இதில் பலம் பொருந்திய தேசியக் கட்சியாக இந்திரா காங்கிரஸ் கட்சி மட்டுமே உள்ளது அடுத்ததாக ஜனதா தளம் உள்ளது பாரதீயக்கட்சி ஒருதேசியக்கட்சியாக தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டாலும் அதன் செல்வாக்கு வடமாநிலங்களிலேயே உயர்வாகவுள்ளது. அடுத்த

## கூட்டுக்கள்

1989 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வெளிவந்து சிறுபான்மை அரசாங்கம் அமைக்கப்பட்டபோதே இவ் அரசாங்கம் தனது முழுமையான ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கப் போவதில்லையெனவும் பொதுத் தேர்தல் ஒன்று இடையில் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். எதிர்பார்த்தது போன்றே ஒன்றரை வருடங்களுக்குள் இருஅரசாங்கங்கள் பதவி விலகியபோதும் அதற்கு மேலும் காலத்தை நீடிக்க முடியாது தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது.



வி.பி.சிங் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டபோதே தேர்தல் மிகவிரைவில் என எதிர்பார்க்கப்பட்டுவந்தது ஆனால் 'சிங்கின்' தேர்தல் வேலைகள் முடிவாகாமையினால் பிற்போடப்பட்டு வந்தாலும் தவிர்க்க முடியாத நிலையில் தேர்தல் அறிவிப்பை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் இந்திய ஜனாதிபதிக்கு ஏற்பட்டு விட்டது.

### தேசிய கட்சிகள்

தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டமையால் தற்பொழுது கட்சிகள் யாவும் சுறுசுறுப்பு அடைந்து விட்டன. தேசிய பிராந்தியகட்சிகளுக்கு இடையில் கூட்டுக்களும் தொகுதி உடன்பாடுகளும் பேரங்களும் மூழுவீச்சில் இடம் பெறத் தொடங்கிவிட்டன. இந்நிலையில் வரப்போகும் இந்தியத் தேர்தல்களம் பற்றிய ஒரு நோக்கு அவசியமாகின்றது.

முக்கிய கட்சியாக கருதப்படக் கூடியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி என்பனமுக்கியமான இடதுசாரிகள் ஆகும் இக்கட்சிகளும் தேசிய ரீதியில் போட்டி இடினும் ஒரு சில மாநிலங்களிலேயே இவற்றின் செல்வாக்கு உயர்வானதாகும். அடுத்த பிரதான கட்சி தற்பொழுது காபந்து பிரதமராக இருக்கும் சந்திரசேகரின் ஜனதா தள (எஸ்) ஆகும்.

### தேர்தல் கூட்டுக்கள்

இத்தேசியக்கட்சிகள்யாவும் வரவிருக்கும் தேர்தலில் கூட்டுக்களை அமைப்பதில் தீவிரமாக சடுபட்டுள்ளன. இதில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் முக்கிய கூட்டாளியாக பிராந்தியக் கட்சியான அ. தி. மு. க வுள்ளது இதைத்தவிர பலம் பொருந்திய பிராந்தியக் கூட்டாளி இந்திரா காங்கிரசிற்கு இல்லை எனவே கூறலாம் அதேவேளை சிறிய பிராந்தியக் கட்சிகள் சிலவும் கூட்டாக உள்ளன.

ஜனதாதளக்கட்சிபலம்பொருந்தியஒரு கூட்டணி அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த தேர்தலில்இருந்ததுபோன்றே தேசிய முன்னணி என்ற ரீதியில் தொகுதி உடன்படிக்கைகளில் அவற்றிற்குள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிகின்றது. இக் கூட்டணியில் தென் மாநிலங்களில் உள்ள பலமான பிராந்தியக் கட்சியான தமிழ் நாட்டில் தி. மு. கவும், ஆந்திராவில் தெலுங்கு தேசியக் கட்சியும், மேற்கே அஸாமில் அஸாம் கண பரிஷத்தும் முக்கிய கட்சிகளாகும். அதேவேளை இம் முறைத் தேர்தலில் தேசிய முன்னணிகூட்டமைப்பு இடதுசாரிக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாட்டிற்கு வரலாம் எனத் தெரிகிறது.

அடுத்த பிரதான கட்சி பாரதீய ஜனதாக் கட்சியாகும். அதன் பிரதான கூட்டாளி சிவசேனையாகும். இச் சிவசேனாவின் செல்வாக்கு மத்திய இந்தியாவில் மகாராஷ்டிரா, மத்திய பிரதேசப் பகுதியில் சற்று உயர்வாக வுண்டு.

இடதுசாரிகளைப்பொறுத்து இம்முறை கடந்த காலங்களைப்போல் அன்றி தேசிய முன்னணியுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ளக் கூடியநிலை உருவாகியுள்ளது.

காபந்து அரசாங்கத்தின் பிரதான சந்திரசேகரின் ஜனதா தளம் (எஸ்) எவருட



னும் சேர்ந்து கூட்டமைத்துக் கொள்ளக்கூடிய நிலையில் உள்ளது. சிலவேளை ஜனதா தள (எஸ்) தேர்தலுக்குமுதல் பலதாகப் பிரிந்து ஒவ்வொரு தேசியக் கட்சியுடனும் இணைந்து கொள்ளவும் கூடும்.

## தளங்கள்

அதேவேளை தேசிய முன்னணி, பாரதீய ஜனதாவோ, இடதுசாரிகளோ ஜனதா தள (எஸ்) உடன் தேர்தல் உடன்பாடு வைத்துக்கொள்ளும் நிலையில் இல்லை எனத் தெரியவருகின்றது.

### கட்சியின் தளங்கள்

மேற்கூறப்பட்ட தேசியக் கட்சிகள் யாவும் தமக்கென பலமான தளங்களை அமைப்பதில் முயற்சிக்கின்றன. இந்திரா காங்கிரஸ் கட்சி வழமைபோல் இம்முறையும் உத்தர பிரதேசத்தையும் மத்திய பிரதேசத்தையும் தனது

**ஜெயா**

தளமாகக் கொண்டு போட்டியிடவுள்ளது. ஆந்திரப் பக்கபலமாக தென்மாநிலங்களில் தனது செல்வாக்கை அதிகரிக்க முயற்சிக்கின்றன.

ஆனால் ஜனதா தளம் கடந்த தேர்தலின்போது உத்தரப் பிரதேசத்தைப் பிரதான தளமாகக் கொள்ளாமல் வகுப்பு மோதல்கள் நிறைந்த பீகாரையே தனது பிரதான தளமாகக் கொள்கிறது அத்தோடு கிழக்கில் உள்ள இடதுசாரிகளுடன் கூட்டுக்களை அமைத்து பீகார், ஒரிஸா, மேற்கு வங்காளப் பகுதியில் தனது தளத்தை விஸ்தரிக்கப் பார்க்கின்றது. அத்தோடு தெற்கில் தி.மு.க. பிராந்தியக் கட்சியுடனும், தெலுங்கு தேசக்கட்சியுடனும் கொண்டுள்ள கூட்டின் அடிப்படையில் தெற்கில் இருந்தும் ஆதரவை எதிர்பார்க்கின்றது. ஆனால் கடந்த முறைத் தேர்தலில் தேசிய முன்னணிக் கூட்டணிக்கு தெற்குப்பிராந்தியக் கட்சிகளால் இலாபம் எதுவும் கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதீய ஜனதாக் கட்சி பெரும்பாலும் மேற்கு மாநிலங்களையும், டில்லியையும் மையமாகக்கொண்டு தனது தளத்தை விஸ்தரிக்க முயற்சிக்கின்றது. இதனை மகாராஷ்டிராவிலும், மத்திய பிரதேசத்திலும் ஓரளவு பலமாகவுள்ள சிவசேனையின் ஆதரவுடன் நிறைவேற்றலாம் என பாரதீயஜனதா திட்டமிட்டுள்ளது.

சந்திரசேகரின் ஜனதா தள (எஸ்) கட்சியைப் பொறுத்து சிக்குள்ள தளம் எனபது பிராந்தியரீதியாக விஸ்தரிக்கப்படுமாப்போல் தெரியவில்லை. ஹரியானாவில் தேவிலாலின் தளத்தினை அடிப்படையாகவும் உத்தரப்பிரதேசத்தில் சந்திரசேகர், முலாயம் சிங் யாதோப் ஆகியோரின் தனிப்பட்ட செல்வாக்கினையும் தளத்தை அமைத்து போட்டியிடப் பார்க்கின்றது என்றே தெரிகின்றது.

இடதுசாரிகளைப் பொறுத்து மேற்கு வங்காளம் கேரளா என்பன அவர்களின் பிரதான தளங்களாகும். தேசிய முன்னணியினருடன் கூட்டு ஏற்படும் பட்சத்தில் கிழக்கு இந்தியாவில் அவர்களின் தளம் விஸ்தரிக்கப்பட வாய்ப்புண்டு.

### கொள்கைகள்

இவ்வாறாக தேர்தல் தளங்களை தெரிவு செய்துள்ள

ஜனதாதளம் உள்ளிட்ட தேசிய முன்னணியினரே மண்டல்கமிஷன் நிறைவேற்றம், சாதி ஒடுக்குமுறை ஒழித்தல், சமநீதி, சமயச்சார்பின்மை போன்றவற்றை தமது கொள்கையாக அறிவித்துள்ளார்கள்.

பாரதீய ஜனதாக் கட்சியினரோ இராமபிரானுக்கு அயோத்தியில் கோயில் அமைத்தல் என்ற கோசத்துடன் சமயச் சார்பின்மை தமது இலட்சியம் எனத் தமது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

சந்திரசேகரின் ஜனதாதள (எஸ் தமது நான்கு மாதகால ஆட்சியின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி தேர்தல் பிரசாரத்தில் இறங்கியுள்ளது.

இடதுசாரிகள் வழமை போன்று அடக்குமுறைக்கு எதிரான தமது கொள்கைப்பை வெளியிடுகின்றன அதே வேளை தேசியமுன்னணியின் தேர்தல் பிரசாரத்தை அடியேற்றித்தமது பிரசாரத்தை அறிவித்துள்ளனர்.

இவ்வாறாக மே மாத இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு கட்சிகள் கூட்டுக்களும், தளங்களும், கொள்கைகளும் வகுத்துச் செயற்பட முற்பட்டுள்ள போதிலும் இவையா



வற்றையும் தீர்மானிக்கும் பொறுப்பு மக்களிடம் தான் உள்ளது.

இவர்கள் சகலர் பற்றியும் ஒரு கணிப்பீடு மக்களிடம்

## கொள்கைகள்

கட்சிகள் இத்தேர்தலின் போது பலமுரண்பாடான விடயங்களை மக்கள் முன் எடுத்துச்சொல்லவுள்ளார்கள்.

கடந்தகால இந்திரா காங்கிரஸ் ஆட்சி மத்தியில் இல்லாத காலங்களில் நிலையான ஆட்சியை ஏனைய கட்சிகளால் கொடுக்க முடியவில்லை என்பதை மக்கள் முன்வைத்து வாக்கு வேட்டையை ஆரம்பித்தது.

ஏற்கனவே உண்டு அவற்றோடு இவர்களின் இன்றைய நடவடிக்கைகளையும் மக்கள் சேர்த்துப் புரிந்து கொள்வதற்கு ஏற்பவே தேர்தல் முடிவுகள் வெளிவரும் ஆனால் அத்தேர்தல் முடிவுகளும் ஆட்சியாளர்களை தீர்மானிக்கலாம் ஆனால் சரியவற்றைத் தீர்மானிக்குமா என்பதில் சந்தேகம் உண்டு தான்.

★ ★ ★

## இங்கேயும் ...

6ஆம் பக்கத் தொடர்ச்சி

''எல்லாரும் வெளிநாட்டுக்கு ஓடினால் இங்கை நோய் நொடி வாறவனுக்கு யார் வைத்தியம் செய்யிறது?'' தனது கணவனது தவிப்பை தாங்காது மங்களம் அங்கலாய்த்தாள்.

''இதோ வந்திட்டன்'' என்றவாறு வேகமாக வந்த டொக்டர் வசந்தனை கண்டதும் ''தம்பி'' என்று மங்களத்தின் நா குழறியது.

''அம்மா நீங்கள் ஆறுதலாக இருங்கோ நாங்கள் கவனிப்பம்'' டொக்டர் வசந்தன் தன் கடமையில் ஈடுபடத் தொடங்கிவிட்டான்.

★ ★ ★

''இனி பயப்படத் தேவையில்லை அம்மா; அப்பா ஆபத்தான நிலையைக் கடந்திட்டார், யோசிக்கத் தேவையில்லை'' வசந்தன் தாயாருக்கு ஆறுதல் சொன்னான்.

''தம்பி உன்ர அப்பாவுக்கு வருத்தம் வந்த கொஞ்ச நேரத்தில வைத்திய வசதி எங்கட தமிழ் மக்களுக்கு இந்த போர்க்காலத்தில எவ்வளவு அவசியம் எண்டு அறிஞ்சிட்டன் உன்ர அப்பாவுக்கு எங்கை உயிருக்கு ஆபத்து வந்திடுமோ எண்டு பயந்திட்டன்'' என்றாள் மங்களம் சற்று மகிழ்ச்சியுடன்.

''வயசுபோன அப்பாவுக்காக உங்கட காலியைக் காப்பாற்ற துடிக்கிறீங்கள். அது மாதிரி தானே அம்மா எத்தனையோ இளம் குடும்பங்கள் தவிச்சு இருக்கும்'' வசந்தன் அமைதியாகச் சொன்னான்.

''ஓம் வசந்தன் என்ர சுய நலம் அழிஞ்சிட்டுது. அண்டைக்கு அபபாவுக்கு வருத்தம் வந்தவுடனை நான பட்ட பாடு அப்பப்பா கொஞ்சமல்ல. இப்ப எனக்குப் புரியுது, நீ வெளிநாட்டுக்கு போகமாட்டன் எண்டது ஏன் எண்டு. பொதுநலமான உன் எண்ணத்தை இப்ப புரிஞ்சு கொண்டுட்டன் நீ வெளிநாட்டுக்கு போகவேண்டாம. எங்கட தமிழ் மக்களுக்கு சேவை செய் அது மகத்தான சேவை அப்ப நீ சொல்லச் சொல்ல எங்களுக்கு புரியவில்லை. எங்களுக்கு ஒன்று எண்டு வந்தவுடனைதான் துடிப்பும் பாதிப்பும் புரியும்'' என்றாள் கனிவுடன் மங்களம்.

''ஏதோ புரிஞ்சு கொண்டீங்களே நீங்களும, அப்பாவும அந்தளவில சந்தோஷம். இனி நிச்சயம் தமிழீழம் மலரும் சந்தேகமேயில்லை'' என்றான் மகிழ்ச்சியுடன் வசந்தன்.

(முற்றும்)

## உயர்தொழில்நுட்ப...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளதாக அமெரிக்க இராணுவத் தரப்பில் சொலலப்படுகிறது. ''அபச்சேஸ் வானூர்திகளில் மெர்சிடேஸ்பென்ஸ்'' என்கிறார் லெப். கேணல் பிரக்கர்.

தூசி, புகை போன்றவற்றால லேசர் கதிர்களால் உந்தப்படும் ஏவுகணைகள் திசை மாறலாம் அபச்சேஸ் மிகப் பலமான கவசங்களை கொண்டது. இலேசரில் தாக்க முடியாது. இதில் அதிசயம் என்னவென்றால், இவ்வளவு உயர் நுணுக்கத் தயாரிப்பான அபச்சேஸ் ஒரு AK-47 துப்பாக்கி வேட்டுக்கு முன்னால் தாக்குப்பிடியாது காரணம்' உலங்கு வானூர்தியின் முன் பக்கக் கண்ணாடிகள் சாதாரணமானவை; கவசம் கிடையாது.

ஆனால், அபச்சேஸ் சந்தர்ப்பசூழ்நிலைக்கு ஏற்ப செயற்பட்டால் அதனால் தரைப் படை யுத்தத்தை குறுகிய காலத்தில் வெற்றிப்பாதைக்குத் திரும்ப முடியும் என்பது சிரேஷ்ட தளபதி போர்ட்றக்கரின கருத்தாகும்.

## இரண்டு கோடி நஷ்டஈடு

வளைகுடாப் போரினால் குவைத்தில் இருந்து நாடு திரும்பிய 76 000 இலங்கையர்களுக்கு இரண்டுகோடி ரூபாய் நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வேலை வாய்ப்புக்களை இழந்தும், தமது உடைமைகளை இழந்தும் நாடு திரும்பிய இலங்கையர்களுக்கே இவ்வாறு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க தொழில் அமைச்சு முடிவு எடுத்ததாம்.

## ஈராக்கில் கிளர்ச்சிக்கு எதிரான
# அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு
# எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை

—ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

ஷியா முஸ்லிம்களுக்கும் குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கும் எதிராக ஈராக் நடவடிக்கை எடுக்குமானால் அமெரிக்கா அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜேர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஜேர்ஜ்புஷ் ஷியா முஸ்லிம்களுக்கும், குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் வான் தாக்குதலையும் அமெரிக்கா தடுக்காது என்றும் தெரிவித்தார்.

இதேநேரம் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் இளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக பெரும் தாக்குதலை நடத்த ஏற்பாடுகளை செய்து வருகிறார். இதற்கு முன்னேற்பாடாக கிளர்ச்சிக்காரர்களால் கைப்பற்றிய இடங்களின் எல்லைகளில் ஸ்கட் ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்திருக்கிறார் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஈராக்கின் எதிர்க்கட்சித்தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தால் அவர்களோடு பேசுவதற்கு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் முன்வந்துள்ளார் என அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால் இவ்வாறு பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்திருப்பது வாஷிங்டனின் கொள்கை மாறிவிட்டது என்று பொருள்படாது என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

## ஈராக்கிய ஏவுகணை அழிப்பிற்கு சோவியத் ரஷ்யா ஆட்சேபம்


(ஜெனிவா)

மூந்நூறு கிலோமீற்றர் தூரம் வரை ஏவக்கூடிய ஏவுகணைகளை ஈராக் தன்வசம் வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்ற சோவியத் யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது. வளைகுடாவில் நிரந்தர போர்நிறுத்தம் ஏற்படுவதற்கான நியந்தனை கொண்ட ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானம் ஈராக் வசமுள்ள இரசாயன, உயிரியல் ஆயுதங்களுடன் ஏவுகணைகளும் ஐ நா மேற்பார்வையில் அழிக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது.

இத்தீர்மான நகலைப் பரிசீலித்த சோவியத் யூனியன் ஈராக்கின் நவீன ஆயுதங்கள் அழிக்கப்பட்டால் இஸ்ரேலினால் தாக்கப்படும் ஆபத்து உண்டு எனச் சுட்டிக் காட்டியது.

ஐ. நா. பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்தத்திற்கான நிபந்தனைகள் ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரப் போர்'' என ஐ. நாவுக்கான ஈராக் தூதுவர் அல் அம்பாரி கூறியுள்ளார். இதனிடையில் மேற்காசியாவில் சமாதான நிலைதோன்றஜோர்தான் முக்கிய பங்கு ஆற்றமுடியும்என்று இஸ்ரேலிய பிரதமர் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஈராக்கின் உள்நாட்டு கிளர்ச்சியை அமெரிக்கா ஊக்குவிக்காது என்றும் பிளவுபட்ட ஈராக்கை காண விரும்பவில்லை என்றும் அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.




## மகாபொல கொடுப்பனவு வழங்கப்படும் நாட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மகாபொல கொடுப்பனவுகள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி வழங்கப்படவுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| **முதலாம் வருட மாணவர்கள் (1989/90)** | | | |
| கலைப்பிரிவு | 28-3-91 | 9.00 - 12.00 | மு. ப |
| வர்த்தகப்பிரிவு | 01-4-91 | 9.00 - 12.00 | மு. ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 03-4-91 | 1.30 - 3.00 | பி. ப |
| மருத்துவ பீடம் | 28-3-91 | 1.30 - 3.00 | பி. ப |
| பௌதிகவிஞ்ஞானபிரிவு | 01-4-91 | 9.00 - 12.00 | மு. ப |
| உயிரியல் விஞ்ஞான பிரிவு | 03-4-91 | 1.30 - 3.00 | பி. ப |
| **இரண்டாம் வருட மாணவர்கள் (1988/89)** | | | |
| கலைப்பிரிவு | 05-4-91 | 9.00 - 12.00 | மு. ப |
| வர்த்தகப்பிரிவு | 01-4-91 | 9.00 - 12.00 | மு. ப |
| வியாபார நிர்வாக பிரிவு | 03-4-91 | 1.30 - 3.00 | பி. ப |
| மருத்துவ பீடம் | 05-4-91 | 1.30 - 3.00 | பி. ப |
| பௌதிக விஞ்ஞான பிரிவு | 01-4-91 | 9.00 - 12.00 | மு. ப |
| உயிரியல் விஞ்ஞான பிரிவு | 03-4-91 | 1.30 - 3.00 | பி. ப |

கொடுப்பனவின் போது பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டையும் ரூபா 2/- பெறுமதியான முத்திரையும் சமர்ப்பிக்கப்படவேண்டுமெனவும் விவசாய பீட மாணவர்கட்குரிய கொடுப்பனவுகள் கிளிநொச்சியில் விவசாய பீடத்தில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார். (விளம்பர இல B 2217)

கடற்படை

உடமைகளையும் ஒப்படைத்ததன்பேரில் அந்த உடமையில் இருந்து மேலும் சில தகவல்கள் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட மூதாட்டி குரும்பசிட்டியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் இலைய தம்பி என்றவிபரங்கள் தெரியவந்துள்ளது.

இவரது உறவினர்கள் யாராவது இருந்தால் உடனடியாக வேலணை உதவி அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்று மூதாட்டியை கூட்டிச்செல்லுமாறு இராமகேசேவை அலுவலர் திரு. மா. அம்பிகைபாகன் கேட்டுள்ளார்.

ஏற்கனவே இந்திலாவிற்கு வள்ளம் மூலம் சென்ற அகதிபடகில் கடற்படையினர்கைது செய்தபோது இந்த மூதாட்டியும் அகப்பட்டிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகின்றது. (14)

கொழும்புச் செய்திகள்

நேற்று யாழ். நகரில் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமக்கிடையில் இணங்கிக் கொண்டதன் பேரிலேயே ச. தே. செஞ்சிலுவைச்சங்கம் பாதுகாப்பு வழங்கி வருகிறது. இன்று வரை ஒப்பந்த மீறல் எதுவும் இடம்பெறவில்லை என்றும், தாம் இராப் பகலாகக் கண்காணித்து வருவதாகவும் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

## மாணவர் ஒன்று கூடல்

முத்தமிழ் விழாவிற்குத் தொண்டர்களாக பெயர் கொடுத்த வலிகாமப்பகுதி மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவரும் (29-03-91) இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சமுகமளிக்கும்படி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பரீட்சை

இரா. சுந்தரலிங்கம் பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அவ்அறிக்கையில் பரீட்சை ஒழுங்குகள் தொடர்பாகச் சிறப்புற அமைவதற்கு வடஇழக்குமாகாணத்தினைச் சேர்ந்த சகல கல்விப் பணிப்பாளர்களுக்குமான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் எட்டாம் திகதி திங்கள் மாலை 2-30 மணியளவில் கொழும்பு பரீட்சை திணைக்களத்தில் பரீட்சை ஆணையாளர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (லோ)

கீரிமலையில்

களான முன்னாளை, இளவாலை, கருகம்பனை, மயிலிட்டி, மத்தாவத்தை, கவிக், வசந்தபுரம், சேந்தான்குளம் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலை மேற்கொண்டது.

இதில் கந்தர் கதிர்காமு (72 வயது இளவாலை வடக்கு) என்பவர் பலியானார். மற்றும் த. பாக்கியவதி (16 வயது கீரிமலை), ஜெயகாந்தன் (20 வயது பன்னாலை), சேனாதிராஜா (42 வயது இளவாலை). செ. மகிபதாஸ் (45 வயது சேந்தான்குளம்), சுந்தரலிங்கம் (வயது 33 தெல்லிப்பழை) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். மற்றும் சென், ஹென்றிஸ் பாடசாலை, நகுலேஸ்வரா வித்தியாலயம், பெய்கன்டாள் மகா வித்தியாலயம் ஆகியனவும் 5ற்கும் மேற்பட்ட வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன. கீரிமலைப் பகுதியில் தொடர்ந்தும் நேற்றுமாலை வரை கடும்மோதல் நடைபெற்ற வண்ணம் இருந்தது. இத்தாக்குதலினால் அச்சமடைந்த அப்பகுதிப் பொதுமக்கள் தமது வீடுகளை விட்டுவெளியேறிய வண்ணம் உள்ளனர். இவர்கள் பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய், சுன்னாகப் பகுதிகளை நோக்கிச் சென்ற வண்ணம் உள்ளனர். (ச)

மல்வத்தை

மனதைப் புண்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம் — இவ்வாறு கிறிஸ்தவ பொதுநிலையினர் முன்னணி ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் ஒவ்வொருவரின் பாதுகாப்பை தாங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் குருநாகல் ஆயர் அதி வண. குமரஹேரத்துக்கும், கொழும்பு அங்கிளிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. ஞானப்பிரகாசத்திற்கும் அதி. வண. ஆயர் டி. ஜே. அம்பலவாணருக்கும்மேற்படிமுன்னணியின் இணைப்பாளர் எஸ். எட்வேட்டால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## ராஜீவின் கார்மீது கல்வீச்சு ராகுலையும் தாக்க முயற்சி

(புதுடில்லி)

தேர்தல் பிரசாரச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கார் கல்வீச்சுக்கு இலக்கானது. ஆதிவாசி மற்றும் ஹரிஜன மக்கள் வாழும் குடியிருப்புகளுக்குச் சென்று விட்டுத் திரும்பும் வழியில் சுமார் இரண்டாயிரம் பேரடங்கிய கூட்டமொன்று ராஜீவ் கார் மீது சரமாரியாக கல்வீச்சு நடத்தியுள்ளது. திறந்த ஜீப்பில் பவனிவந்த ராஜீவையும், அவரது மகள் ராகுலையும் வெளியே இழுத்துத் தாக்க முயன்ற கூட்டத்தினரை இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் தடுத்து விட்டனர். ஆயினும் ராஜீவ் காருடன் பவனி வந்த பல கார்கள் பலத்த சேதமுற்றன. இந்தச் சம்பவத்தையடுத்து ராஜீவ் தனது திட்டத்தை கைவிட்டுள்ளார்.

அதேவேளை இச்சம்பவத்தில் தான் தாக்கப்படவில்லை என ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

## 36 ரூபாவிற்கு மண்ணெண்ணை

காரைநகர் ப. நோ. கூ. சங்கம் மண்ணெண்ணை கொள்வனவு செய்து தமது சங்க எல்லைப் பரப்பிற்குள் உள்ள மக்களுக்கு 1 பங்கீட்டட்டைக்கு 3/4 லீற்றர் என்ற வீதம் 1 லீற்றர் எண்ணை ரூபா 36/- விலைப்படி விற்பனை செய்துள்ளது.

வெல்லாவெளியில்

இரண்டு முப்பது மணியளவில் மேற்படி முகாமிலிருந்து வெளியேறி தேடுதல் வேட்டைக்காக இராணுவத்தினரும் ரேவோவினரும் வந்த போது இவர்களை விடுதலைப் புலிகள் தும்பன் கேணி எனும் இடத்தில் வைத்து எதிர்த்தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் பல இராணுவத்தினரும் ரெலோவினரும் உயிரிழந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் சேதவிபரம் எதுவும் தெரியவில்லை. இந்த தாக்குதலைத் தொடர்ந்து இவ்விரு பிரிவினரும் பின்வாங்கி சென்றனர். இச் சமயத்தில் செல்வி பொன்னையா கலாவதி (வயது 20), பொன்னையா சிவநேசராசா (வயது 8) ஆகிய சகோதரர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். இந்த துப்பாக்கி சூட்டில் இவ்விருவரது தந்தையான பொன்னையா படுகாயமடைந்துள்ளார்.

புலிகளின்

யாளரிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் விடுதலைப்புலிகளுக்கு மக்களாதரவு இல்லாமையினால் தான் தேர்தலில் போட்டியிட தயங்குவதாகவும், வாக்காளரின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாமையினாலேயே அரசு தேர்தல் நடத்த முடியாதிருப்பதாகவும் கூறினார். இல- இந். உடன்பாடு செயற்படுத்த முடியாமற் போனமைக்கு இரு நாட்டு அரசுகளுமே பொறுப்பு என்றார். இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடக்கூடாது. ஏனெனில் இது ஒரு குடும்பத்திற்குள் நடக்கும் சண்டையைப்போன்றதுஎனவும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

## ஆழ்ந்த அனுதாபங்கள்

(யாழ்ப்பாணம்)

ஈழநாதம் மக்கள் தினசரியின் அலுவலக நிருபராகப் பணிபுரியும் திரு. கணேசலிங்கம் அவர்களின் தந்தையார் காலமாகிவிட்டார். குடும்பத் தலைவரை இழந்து துயருறும் திரு. கணேசலிங்கம் அவர்களது குடும்பத்தினருக்கு ஈழநாதம் பணியாளர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.